‘B’ பிரிவு பள்ளிகளில் பணிபுரியும் பி.டி. ஆசிரியர்கள்

திரு. அ. அய்யணன் அம்பலம் (திரு. கே. எஸ். கணபதி சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1—4—1970-க்குப் பிறகு நியமிக்கப்பட்டவர்களும், ஆனால், 3—3—1973 அன்றுள்ளபடி பணியிலுள்ளவர்களுமான ‘B’ பிரிவு பள்ளிகளில் பணிபுரியும் பி.டி. ஆசிரியர்களை முறைப்படுத்துவதற்கு வகை செய்யக்கூடிய குறிப்பான அரசு ஆணை வெளியிடப்பட்டிருந்தும் கூட அவர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர் என்பது உண்மையா?

(இ) ஆமெனில், இதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

Repair Works of the Government School Buildings

*255. Q—THIRU M. SANKARALINGAM : Will the Hon. the Minister for Education be pleased to state with reference to the answer given to question No. 173, on 3–3–1973:

(*a*) whether any decision has been taken on the resolution sent by the Kanyakumari District Development Council requesting that a separate Engineer should be appointed to undertake the repair works of the Government school buildings in that District; and

(*b*) if so, the details thereof?

அரசுப் பள்ளிக்கூடங்களைப் பழுது பார்த்தல்

திரு. எம். சங்கரலிங்கம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள், சட்ட மன்ற மேலவையில் 3—3—1973-ஆம் நாளன்று வினா எண் 173-க்கு அளித்த விடையினையொட்டி, கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கன்னியாகுமரி மாவட்ட அரசுப் பள்ளிக் கட்டிடங்களைப் பழுது பார்க்கும் வேலைகளை மேற்கொள்ள தனிப்பொறியாளர் நியமிக்க வேண்டுமென்று அம் மாவட்ட அபிவிருத்தி மன்றம் அனுப்பிய தீர்மானத்தின் மீது முடிவு ஏதும் எடுக்கப்பட்டுவிட்டதா?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) &(இ) இப் பொருள் குறித்து அரசு, தலைமைப் பொறியாளருடன் கலந்து ஆலோசித்து வருகிறது.

திரு. எஸ். ஜெயராம செட்டியார் : தலைவரவர்களே, என்னுடைய அனுபவத்திலிருந்து சொல்கிறேன். தனியார் பள்ளிக்கூடமாக இருந்தாலும் சரி, சர்க்கார் நடத்தும் பள்ளிக்கூடமாக இருந்தாலும் சரி, பொதுப் பணித் துறையில் எஸ்டிமேட் போட்டு அப்ரூவல் வாங்குவதற்குக் கஷ்டமாக இருப்பதால், இதற்காக ஒரு விங் (Wing) ஏற்படுத்திவிட்டால் நல்லது. அதுபற்றி அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, கல்வித் துறையில் பல்லாண்டு காலமாக வற்புறுத்தி வருகிறார்கள். கல்வித் துறைக்கே இப்படி ஒரு விங் கொடுத்தால் நல்லது என்று சொன்னோம். ஆனால் அந்தத் துறையின் மேற்பார்வையின் கீழ், அதற்குத் தனி ஏற்பாடுகள் செய்வோம் என்று தலைமைப் பொறியாளர்கள் கூறியிருக்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில், அங்கே 320 பள்ளிகள் இருக்கின்றன. அவற்றைப் பழுதுபார்க்க, கட்டடங்களை விஸ்தரிக்க, பல்வேறு பணிகளில் ஈடுபட, அதற்கென்று தனி அலுவலரை நியமித்தால் நல்லது என்று அங்கேயிருக்கிறவர்களால் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. கல்வித் துறையும் அதை உணர்ந்து வற்புறுத்தி வருகிறது. தலைமைப் பொறியாளருடைய கருத்து கேட்கப்பட்டிருக்கிறது. அவருடைய கருத்துரை வந்ததற்குப் பிறகு, அதன் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

Inmates of the Fisheries Training Centre at Adayar, Madras

* 256 Q.—THIRU L. BALARAMAN (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state :

(a) whether the Government are aware of the eveteasing indulged in by the inmates of the Fisheries Training Centre at Adayar, Madras;

(b) whether there were clashes on this account about the 25th March, 1973; and

(c) if so, the action taken thereon?